*பல்கலாச்சார அவுஸ்திரேலியா - ஒற்றுமையானது, பலமானது, வெற்றிகரமானது*, இது பல்கலாச்சார அவுஸ்திரேலியாவுக்கு

**மீண்டும் பொறுப்பேற்கும் அரசாங்கத்தின் பொது அறிக்கையாகும்; இது எதிர்வரும் வருடங்களுக்கான முன்னுரிமைகள் மற்றும் உத்திரீதியான வழிகள் ஆகிய இரண்டையும் அமைக்கிறது.**

## முன்னுரை

### அவுஸ்திரேலியப் பிரதமர்

உலகில் அவுஸ்திரேலியாவே மிகவும் வெற்றிகரமான பல்கலாச்சாரச் சமூகமாகும்.

எங்கள் ஆதிமூல அவுஸ்திரேலியர்களைப் போலவே நாங்களும் பழைமையானவர்கள், இவர்களே பூமியில் மிகப்பழைமையான தொடர்ந்துவரும் மனித கலாச்சாரம், இவர்கள் 50,000 வருடங்களுக்கும் மேலாக இந்த நாட்டைப் பராமரித்து வருகிறார்கள்.

உலகிலுள்ள எந்தவொரு நாடு, எந்தவொரு மதம், எந்தவொரு இனத்திலிருந்தும் வந்திருக்கக் கூடிய இந்தப் புலம்பெயர் அன்னையின் கரங்களில் நாங்கள் குழந்தைகளைப் போல இருக்கிறோம்.

அவுஸ்திரேலியா ஒரு குடிவரவு நாடு. தற்போதைய எங்கள் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் வெளிநாடுகளில் பிறந்தவர்களாக அல்லது வெளிநாட்டில் பிறந்த ஒரு பெற்றோரைக் கொண்டவராகவே இருப்பர்.

மேலும், நாங்கள் அனைத்துக் கலாச்சாரத்தையும், இனத்தையும், சமயத்தையும், நாட்டையும் சேர்ந்தவர்கள்.

நாங்கள் இனம், சமயம் அல்லது கலாச்சாரத்தால் வரையறுக்கப்படவில்லை, சுதந்திரம், ஜனநாயகம், சட்ட விதி மற்றும் வாய்ப்புச் சமத்துவம் – “நேர்மையான வாய்ப்பு” முதலியவற்றின் பகிரப்பட்ட பெறுமதிகள் மூலமே வரையறுக்கப்படுகிறோம்.

பரஸ்பர மரியாதையே எங்களை ஒன்றாக இணைத்திருக்கும் பசையாகும் - அதாவது, எங்கள் ஒவ்வொருவருக்கும் சம மரியாதை, சம கௌரவம், சம வாய்ப்புகள் கிடைக்கத் தகுதியுள்ளது என்ற ஆழ்ந்த அங்கீகாரம்.

அதோடு தேசியப் பாதுகாப்பு - அதாவது எங்கள் நாடு, எங்கள் மக்கள் மற்றும் எங்கள் மதிப்புகளைக் காப்பதற்கு உறுதியான தீர்மானம் - என்ற அத்திவாரத்தின் மீதுதான் எங்கள் சுதந்திரங்கள் கட்டமைக்கப்பட்டு, பேணப்படுகின்றன.

உலகளாவிய பதற்றங்கள் வளர்ந்து, உறுதியற்றநிலை எழுகின்ற சமயத்தில், அவுஸ்திரேலியாவானது அதன் பல்வகைத்தன்மையை அரவணைக்கின்ற ஒரு இணக்கமான, மனித சமூக சமத்துவமுள்ள, ஊக்கமளிக்கின்ற ஒரு நாட்டின் நிலையுறுதியான உதாரணமாகத் தொடர்ந்திருக்கிறது.

எங்களுடைய அறிக்கையான *பல்கலாச்சார அவுஸ்திரேலியா: ஒற்றுமையானது, பலமானது, வெற்றிகரமானது* என்பது, இனவாதத்திற்கும் பாரபட்சத்திற்கும் இடமே இல்லாத பல்கலாச்சார அவுஸ்திரேலியாவுக்கு அரசாங்கமளிக்கும் பொறுப்பைப் புதுப்பிப்பதோடு, மீளவலியுறுத்தவும் செய்கிறது.

எங்களுடைய அறிக்கையான சகல அவுஸ்திரேலியர்களுக்கும் *பல்கலாச்சார அவுஸ்திரேலியா: ஒற்றுமையானது, பலமானது, வெற்றிகரமானது* என்பதைப் பாராட்டுகிறேன்.



**மேதகு மால்கம் ரர்ன்புல் எம்.பி**

பிரதமர்- அவுஸ்திரேலியா

## சமூகச் சேவைகளுக்கான அமைச்சரும் சமுகச் சேவைகள் மற்றும் பல்கலாச்சார விவகாரங்களுக்கான உதவி அமைச்சரும் விடுக்கும் கூட்டுச் செய்தி

எங்களுடைய வலிமையான, வெற்றிகரமான பல்கலாச்சாரச் சமூகம் குறித்து சகல அவுஸ்திரேலியர்களும் பெருமை கொள்ள முடியும். அவுஸ்திரேலியாவின் வரலாறானது ஆதிவாசிகள் மற்றும் ரோரெஸ் நீரிணைத் தீவுவாசிகளுடன் ஆதியில் தொடங்கி, பிரிட்டிஷ் நிறுவனங்களின் உருவாக்கத்துடன் வளர்ந்து, இப்போது உலகின் பல மூலைகளையும் சேர்ந்த தீவுவாசிகளுடன் தொடர்கிறது.

நாங்கள் அனுபவித்து மகிழும் சுதந்திரம் தற்செயலானது அல்ல. தொடர்ந்துவந்த அரசாங்கங்கள், எங்கள் தனித்துவமான தேசிய அடையாளத்தையும் ஒருங்கிணைந்த ஐக்கிய மக்களாக இருப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்ற அதேவேளை, பல்வகைத்தன்மையை அரவணைக்கின்ற எங்கள் சமூகத்தின் தொலைநோக்கைத் தொடங்கியுள்ளன.

பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் அதிகரிப்பு குறித்த கவலையை வளர்த்துள்ள பலருள்ள இந்தக் காலத்தில், ஜனநாயகம், வாய்ப்பு மற்றும் எங்களுடைய பகிரப்பட்ட மதிப்புகளுக்கு எங்கள் நிலையுறுதியான பொறுப்பை மீண்டும் உறுதிப்படுத்த இதைவிடச் சிறந்த நேரமில்லை.

அவுஸ்திரேலிய அரசாங்கம், எங்களுடைய தேசத்தின் பாதுகாப்புக்கும் எங்களுடைய மக்களின் சுதந்திரத்திற்கும் பொறுப்பேற்றுள்ளது. எங்களுடைய அறிக்கையான *பல்கலாச்சார அவுஸ்திரேலியா: ஒற்றுமையானது, பலமானது, வெற்றிகரமானது* என்பதில், கடந்த காலத்தில் எங்கள் வெற்றியைத் தூண்டியுள்ள மற்றும் எதிர்காலத்திலும் எங்கள் செழிப்புக்கு உதவவுள்ள பெறுமதிகளைத் தொடக்கிவைத்துள்ளது.

இந்த அறிக்கையானது கலாச்சாரப் பல்வகைத்தன்மை என்பது எங்கள் மிகப்பெரிய பலங்களில் ஒன்றாகும் என்றும்; அனைவருக்கும் சொந்தமான மற்றும் சிறந்ததொரு வாழ்க்கையை வாழுவதற்கு அனைவருக்கும் வாய்ப்பளிக்கின்ற ஒரு எதிர்காலத்தைக் கட்டமைக்க எங்களை ஆயத்தப்படுத்தும் ஒன்று என்றும் அங்கீகரிக்கிறது. இது எங்களுடைய ஜனநாயக அமைப்புகள் மற்றும் சட்ட விதியின் மையநிலையைத் தாங்கிப்பிடிக்கிறது, எங்களுடைய தேசிய அடையாளத்தில் குடியுரிமையின் முக்கியத்துவத்தைத் தனிப்படுத்திக்காட்டுகிறது, மேலும் இது எங்களுடைய சக அவுஸ்திரேலியர்களை நாங்கள் எல்லோரும் மதிக்க வேண்டும் என்ற பொறுப்பை மேலும் தெளிவுபடுத்துகிறது.

இந்த அறிக்கையை அத்திவாரமாகக் கொண்டே எங்கள் பல்கலாச்சாரச் சமூகத்தை நாம் மேலும் கட்டமைக்க முடியும், மேலும் சுதந்திரம் மற்றும் செழுமையின் சோர்வற்ற அவாவில் அனைத்து அவுஸ்திரேலியர்களுடனும் சேர்ந்து வேலைபுரிய எதிர்பார்க்கிறோம்.



**மேதகு கிறிஸ்ரியன் போர்ட்டர் எம்.பி**

*சமூகச் சேவைகளுக்கான அமைச்சர்*



**செனட்டர் மேதகு ஸெட் சிசெல்ஜா**

சமூகச் சேவைகள் மற்றும் பல்கலாச்சார விவகாரங்களுக்கான உதவி அமைச்சர்

## *பல்கலாச்சார அவுஸ்திரேலியா: ஒற்றுமையானது, பலமானது, வெற்றிகரமானது*

**எங்களுடைய பகிரப்பட்ட வரலாறு**

உலகிலேயே அவுஸ்திரேலியாவே மிகவும் வெற்றிகரமான பல்கலாச்சாரச் சமூகமாகும், இது பெருமெண்ணிக்கையான கலாச்சாரங்கள், அனுபவங்கள், சமய நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்களை ஒன்றிணைக்கிறது. நாங்கள் 300-க்கும் மேற்பட்ட வித்தியாசமான மூதாதையர்களின் — ஆதிமூல அவுஸ்திரேலியர்களில் தொடங்கி புத்தம் புதிதாக வந்தடைந்துள்ளவர்கள் வரை — பங்களிப்புக்குரிய ஒரு நாடாக எங்களுடைய சாதனைகளை மேலெழுதுகிறோம்.

சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் செழிப்பு ஆகியவற்றுக்கான எங்கள் பொதுவான பெறுமதிகள் மற்றும் பொறுப்பால் நியாயப்படுத்தப்படுகின்ற எங்கள் கலாச்சாரப் பல்வகைத்தன்மைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நாங்கள் செழித்தோங்கியுள்ளோம்.

எங்களுடைய தேசத்தில் ஆதிவாசிகள் மற்றும் ரோரெஸ் நீரிணைத் தீவுவாசிகள் நிறைந்துள்ளனர், எங்கள் தேசமே இந்தக் கிரகத்தில் நீடித்துவாழும் மிகப்பழைமையான கலாச்சாரம், அதோடு இதுவே தமது புதிய வாழ்க்கையை முன்னெடுக்க ஏற்ற இடமாகப் பலகோடி பேரால் தெரிவுசெய்யப்பட்ட நாடாகும்.

50,000-க்கும் மேற்பட்ட வருடங்களாக, இப்போது நாம் அவுஸ்திரேலியா என்று அழைக்கும் இந்த நிலங்களில் ஆதிமுதல் அவுஸ்திரேலியர்கள் இங்கு வசித்துள்ளனர், கற்றுள்ளனர், தேவைக்கேற்ப மாறியுள்ளனர், உயிர்தப்பியுள்ளனர். பக்கத்திற்குப் பக்கமாக வசித்து, அவர்கள் இந்தக் கண்டம் முழுவதும் 250-க்கும் மேற்பட்ட வித்தியாசமான மொழிக் குழுக்களை அல்லது ‘தேசங்களை’ உள்ளடக்கினர், அவை ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான கலாச்சாரங்கள், சமய நம்பிக்கைகள் மற்றும் கிளைமொழிகள் உள்ளன. இந்தத் தேசங்களின் வழிவந்தவர்கள், வேறு எந்தவொரு மக்களின் நினைவுக்கும் அப்பால் பூமியிலுள்ள மிகப்பழைமையான பிழைத்துவாழும் கலாச்சாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர், நேரங்கள் மற்றும் இடங்கள் குறித்த வரலாறுகளை உடையவர்கள்.

இந்த வரலாறானது பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் குடியேற்றங்களையும், எங்கள் பாராளுமன்ற ஜனநாயகம், அமைப்புகள் மற்றும் சட்டம் ஆகிவற்றின் உருவாகத்தையும் கடந்து நவீன அவுஸ்திரேலியாவின் நிர்மாணத்துடன் தொடர்ந்தது. காலம் செல்லச்செல்ல, எங்களுடைய வரலாறானது அவுஸ்திரேலியாவைத் தமது புகலிடமாகக் கொண்ட அனைத்துக் கண்டங்களையும் சேர்ந்த பலகோடி பேரை உள்ளடக்கி வளர்ந்தது.

இன்று, அவுஸ்திரேலியர்கள் இங்கு குடிபெயர்ந்து வந்துள்ளவர்களை அவர்களின் வாழ்க்கைகளைக் கட்டமைக்குமாறும் எங்களுடைய தேசத்திற்குப் பங்களிப்பை மேற்கொள்ளுமாறும், எங்கள் சுதந்திரமான, பொதுவான சமூகத்தின் பகுதியாக இங்கிருக்குமாறும் வரவேற்கிறார்கள்.

காலம் கடக்கையில் பலர் ஒன்றாக இவ்வாறு வருவது எங்கள் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்ப உதவியது, எங்களுடைய சமூகங்களுக்கு உயிரூட்டியது, எங்களுடைய கலாச்சார அனுபவங்களை அதிகரித்தது, எங்களுடைய வாய்ப்புகளை உயர்த்தியது, மிகக் குறிப்பாக உலகத்தை நாங்கள் பார்த்து, அதனுடன் ஈடுபடும் வழியை விரிவாக்கியது.

அரசாங்கங்கள், சமூகம் மற்றும் தனிநபருக்கு இடையில் பரஸ்பர கடப்பாடுகளைக் கட்டமைத்தல்- குடியுரிமையைப் பொருட்படுத்தாமல் - எங்கள் நெகிழ்ச்சியையும், உரிமைகொண்டாடும் உணர்வையும் பலப்படுத்துகிறது.

நாம் ஒன்றுசேர்ந்து, எங்களுடைய பகிர்ந்த பெறுமதிகள், உரிமைகள், பொறுப்புகள் முதலியவற்றுடன் இப்போதைய எங்கள் நவீன, செழிப்பான அவுஸ்திரேலியாவைக் கட்டமைத்துள்ளோம்.

**பகிர்ந்த பெறுமதிகள்**

எங்களுடைய பெறுமதிகள் எங்களை ஐக்கியப்படுத்துகின்றன, எங்களுக்கிடையில் சமூகப் பிணைப்புகளை உருவாக்குகின்றன. அவை எங்கள் சமூகத்திற்கான அடித்தளத்தையும் அனைவருக்கும் சொந்தமான பகிரப்பட்ட எதிர்காலத்தையும் வழங்குகின்றன. எங்களுடைய பெறுமதிகளின் அடிப்படை:

***மரியாதை***

நாங்கள் சட்ட விதி மற்றும் அவுஸ்திரேலியாவுக்கான பற்றிணைப்பை மதிக்கிறோம்

மற்றும் அவற்றைக் கடைப்பிடிக்கப் பொறுப்பேற்கிறோம்.

சகலரினதும் சுதந்திரத்திற்கும் கௌரவத்திற்கும் மரியாதை செலுத்துகிறோம்.

எங்களுடைய பல்வகைத்தன்மைக்குப் பெறுமதி சேர்க்கிறோம், பரஸ்பர மரியாதை, உள்ளடக்கல், நியாயம் மற்றும் மனிதாபிமானம் முதலியவற்றை ஏற்றுக்கொள்கிறோம்.

***சமத்துவம்***

ஆண் பெண் சமத்துவத்தை ஆதரிக்கிறோம்.

சட்டத்திற்கு முன்னால் சமமாக இருப்பதாக நம்புகிறோம்.

அனைவருக்கும் சமமான வாய்ப்பு என்பதில் நம்பிக்கையாக இருக்கிறோம்.

***சுதந்திரம்***

சுதந்திரத்திற்கு நாங்கள் அளிக்கும் பொறுப்பு அடிப்படையானது.

கருத்து, பேச்சு, சமயம், நிறுவனம், கழகம் ஆகியவற்றின் சுதந்திரத்திற்கு

ஆதரவளிக்கிறோம்.

பாராளுமன்ற ஜனநாயகத்திற்குப் பொறுப்பேற்கிறோம்.

எங்கள் குடிசார் கடமைகளைப் பூர்த்திசெய்வதற்கான பொறுப்பை ஏற்கிறோம்.

எங்களுடைய பெறுமதிகளைத் தரம் தாழ்த்துகின்ற நடைமுறைகளுக்கும் நடத்தைகளுக்கும் அவுஸ்திரேலியாவில் இடமில்லை.

நாம் எல்லோருமே எங்கள் தேசத்தின் பொருளாதார வெற்றி, கலாச்சார மற்றும் சமயச் சுதந்திரம் மற்றும் பல்வகைத்தன்மை ஆகியவற்றிலிருந்து நன்மையடைகிறோம்.

எங்கள் பொதுவான பெறுமதிகளுக்கு பலமான பொறுப்பைப் பேணுவதே அவுஸ்திரேலியர்களின் அதிசிறந்த ஆர்வமாக உள்ளது.

**பகிர்ந்த உரிமைகள் மற்றும் பொறுப்புகள்**

பரஸ்பர மரியாதை மற்றும் பரஸ்பர பொறுப்பின் முக்கியத்தை அங்கீகரிக்கிறோம். எங்கள் செழுமைக்குப் பங்களிக்கின்ற - மற்றும் எங்கள் செழுமையிலிருந்து நன்மையடைகின்ற- வாய்ப்பை அனைவருக்கும் கொடுக்க நினைக்கின்ற ஒரு ஸ்திரமான, நெகிழ்வான மற்றும் இணக்கமான சமூகத்தை உறுதிசெய்கின்ற உரிமைகள் மற்றும் பொறுப்புகளின் சமநிலையே பல்கலாச்சாரச் சமூகமாக எங்களுடைய வெற்றிக்குக் காரணமாகும்.

எங்களுடையது ஒரு சுதந்திரமான ஜனநாயக வழக்கில் நிறுவப்பட்ட சமூகமாகும், இங்கு எந்தவொருவரின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட முடியாதவையாகும்.

குடியுரிமை என்பது ஒரு சிறப்புரிமை, மேலும் அவுஸ்திரேலியக் குடியுரிமைக் கொண்டாட்டத்தின் பகுதியாக, புதிய குடிமகன்கள் '*நான் யாருடைய ஜனநாயக நம்பிக்கைகளைப் பகிர்கிறேனோ, நான் யாருடைய உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதிக்கிறேனோ, நான் யாருடைய சட்டங்களைத் தாங்கிப்பிடித்து, கீழ்ப்படிவேனோ அந்த அவுஸ்திரேலியாவுக்கும் அதன் மக்களுக்கும்*' விசுவாசத்தை உறுதியளிப்பதாக் கூறுகிறார்கள்.
அவுஸ்திரேலியக் குடிமக்களோ இல்லையோ யாராக இருந்தாலும் எங்கள் நாட்டிலுள்ளவர்கள் அவுஸ்திரேலியச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறார்கள், எங்கள் ஜனநாயகச் செயலாக்கத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் மற்றும் அனைவரையும் மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்துகிறார்கள் என்று அவுஸ்திரேலியர்கள் உரிமையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

**பாதுகாப்பான மற்றும் பத்திரமான அவுஸ்திரேலியா**

பலதரப்பட்ட, இணக்கமான அவுஸ்திரேலியாவுக்குத் தளமிடுவது எங்கள் தேசத்தின் பாதுகாப்பாகும். அவுஸ்திரேலிய அரசாங்கமானது அனைத்து அவுஸ்திரேலியர்களினதும் பாதுகாப்பு மற்றும் பத்திரத்திற்கு அதியுயர் முன்னுரிமை அளிக்கிறது. உலகெங்கும் நடந்துள்ள அண்மைய பயங்கரவாதத் தாக்குதல்கள், அவுஸ்திரேலியச் சமூகத்தில் நியாயமான கவலையை உண்டாக்கியுள்ளன.

அரசாங்கமானது பயங்கரவாத எதிர்ப்பு, பலத்த எல்லைகள் மற்றும் பலத்த தேசியப் பாதுகாப்பு ஆகியவற்றில் தொடர்ச்சியாக முதலிடுவதன் மூலம் இந்த அச்சுறுத்தல்களுக்குப் பதிலாற்றி வருகிறது. இது, அவுஸ்திரேலியா இப்போதும் திறந்த, உள்ளடக்கலான, சுதந்திரமான, பாதுகாப்பான சமூகமாகவே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த உதவும்.

எனினும், இந்த அச்சுறுத்தல்களின் முகத்தில், எங்களுடைய பகிர்ந்த பெறுமதிகள் மற்றும் தேசிய ஒற்றுமை குறித்து நாங்கள் விட்டுக்கொடுப்பதில்லை. பரஸ்பர மரியாதையின் ஊடாக எங்களை ஒன்று சேர்க்கின்ற மற்றும் எங்களுடைய வித்தியாசங்களைத் தெரிவிக்கின்ற விஷயங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், அவுஸ்திரேலியச் சமூகத்தின் பாதுகாப்பை மிகச்சிறப்பாக அதிகரிக்கிறோம் என்று அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.

**எதிர்காலத்திற்காக பகிர்ந்த தொலைநோக்கு**

எங்களுடைய தேசம் மற்றும் எங்களுடைய ஜனநாயக அமைப்புகள் மற்றும் பெறுமதிகளுக்கு பகிர்ந்த பொறுப்பேற்பின் மூலம் அவுஸ்திரேலியா ஐக்கியப்படுத்தப்படுகிறது. ஏற்பையும் புரிந்துணர்வையும் வளர்க்குமாறும், எங்கள் சமூகம் தொடர்ந்து பாதுகாப்பாக, ஒருங்கிணைவாக, இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்துமாறும் எங்கள் எல்லோருக்கும் ஊக்கமளிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையில், அரசாங்கம் ஆனது தொடர்ந்தும் பரஸ்பர மரியாதை என்ற கோட்பாட்டை வளர்க்கிறது, அவுஸ்திரேலியச் சமூகத்துடனான இணக்கமின்மையாக இனத்துவேசத்தையும் பாரபட்சத்தையும் ஒழிக்கிறது.

இது பல சமூக மற்றும் தன்னார்வத் தொண்டுச் செயற்பாடுகளுடன் சேர்ந்து எங்கள் ஐக்கியத்தைத் தூண்டுகின்ற, ஆதரிக்கின்ற, வாழவைக்கின்ற பிற அரசாங்கக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவுசெய்கிறது. உதாரணமாக:

- வயதுவந்த புலம்பெயர்பவர் ஆங்கிலத் திட்டம் ஆனது தகுதியான புலம்பெயர்பவர்களையும் மனிதாபிமான அடிப்படையில் நுழைந்துள்ளவர்களையும் அடிப்படை ஆங்கில மொழியையும் குடியேற்றத் திறமைகளையும் கற்க உதவுகிறது, இதன் மூலம் அவர்களை அவுஸ்திரேலியச் சமூகத்தில் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பங்களிப்புச் செய்யவைக்கிறது.

- அரசாங்கத்தின் பல்கலாச்சார அணுகல் மற்றும் தகைமைக் கொள்கையானது, அவுஸ்திரேலியர்கள் எந்தவொரு கலாச்சார மற்றும் மொழிப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அனைவரினதும் தேவைகளைப் பூர்த்திசெய்யும் திட்டங்களையும் சேவைகளையும் உறுதிப்படுத்துகிறது.

- குடிசார் சமூகத்தில் முழுமையான, செயலாற்றுகின்ற பங்கேற்பாளர்களாக இருக்கும் வாய்ப்பை புதிய புலம்பெயர்ந்தவர்களுக்கு குடியுரிமைக்கான வழிகள் அளிக்கின்றன.

- அரசாங்கமானது வானொலி, அச்சு, இணையம் மற்றும் தொலைக்காட்சி

முதலியவற்றின் ஊடாக பலமான மற்றும் பலவகையான பல்கலாச்சார ஊடகத்தை ஆதரிக்கிறது.

- இணக்க நாள் என்பது 1999-இல் உருவாக்கப்பட்டது, இப்போது ஒவ்வொரு வருடமும் இதை ஆயிரக்கணக்கான அவுஸ்திரேலியர்கள் கொண்டாடுகிறார்கள், இதன்மூலம் அனைவருக்குமான உள்ளடக்குதல், மரியாதை, சொந்தமாக்குதல் செய்தியைப் பரப்புகிறார்கள்.

- அவுஸ்திரேலிய பல்கலாச்சாரச் சபை என்பது முக்கிய ஆலோசனையளிக்கும் அமைப்பாகச் செயலாற்றுகிறது, இது அரசாங்கத்திற்குக் கம்பீரமான, சுதந்திரமான ஆலோசனையை வழங்குகிறது.

அவுஸ்திரேலியர்கள் எங்கள் இணக்கத்தையும் செழுமையையும் குறைத்து மதிப்பிடுவதில்லை. ஒன்றாக - தனிநபர்கள், குழுக்கள் மற்றும் அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலும் ஆக - எங்களுடைய பகிர்ந்த பெறுமதிகளின் வழிகாட்டலில், உத்திரீதியான வழிகளைப் பின்பற்றி பலமான, மேலும் இசைவிணக்கமான, செழுமையான சமூகங்களைத் தொடர்ந்து கட்டியெழுப்புவோம்.

## புதிதாக வருபவர்களின் பொருளாதார மற்றும் சமூகப் பங்குபற்றலை ஊக்குவித்தல்

எங்கள் சமூக மற்றும் பொருளாதார அமைப்புக்குப் பங்களிக்கின்ற புலம்பெயர்பவர்களின் செழிப்பான வரலாற்றை அவுஸ்திரேலியா கொண்டுள்ளது. எங்களுடைய உள்ளடக்குகின்ற பல்கலாச்சாரச் சமூகத்துடன் இது இன்றும் தொடர்கிறது, இதனால் எங்கள் தேசத்தின் வெற்றிக்கு புதிதாக வந்துசேர்பவர்களுக்கும் பங்களிக்கும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

சமூகங்கள், பாடசாலைகள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள், சமய அடிப்படையான நிறுவனங்கள், முதலாளிகள், அரசாங்கங்கள் என அனைத்தும் ஒன்றிணைந்து, அவுஸ்திரேலியச் சமூகத்திற்கு சாதகமாகப் பங்களிப்பதற்கான வாய்ப்புகளை மக்களுக்கு அளிக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்பவர்கள் புதிய வாய்ப்புகளுக்கான அல்லது சிறப்பான வாழ்க்கைக்கான தேடலைப் பகிர்கிறார்கள்.

அதே நேரத்தில், புதிய புலம்பெயர்வாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மூலமான பொருளாதார மற்றும் சமூக ஒருங்கிணைவானது அவர்களுடைய எதிர்காலத்திற்கு இன்றியமையாததாகும். அவர்களுடைய புதிய புகலிடத்தில் இணைந்துவிட்டதாகவும், அவுஸ்திரேலியச் சமூகத்தின் பகுதியாக இருப்பதாகவும் உணர்வது ஒரு மதிப்பும் உடைமையும் உள்ள உணர்வை உருவாக்கும்.

மிகச்சிறந்த நடைமுறை என்று பரவலாகக் கருதப்படுகின்ற, அவுஸ்திரேலிய வாழ்க்கைக்குள் ஒருங்கிணைவதற்கு புதிய புலம்பெயர்வாளர்களுக்கு உதவுவதற்குக் கட்டமைக்கப்பட்ட ஒரு குடியேற்றக் கட்டமைப்பை அரசாங்கம் வழங்கும். புலம்பெயர்ந்தவர்கள் அவுஸ்திரேலியச் சமூகத்தின் தம்மைச் சார்ந்திருக்கும், செயலாற்றுகின்ற உறுப்பினர்கள் ஆகுவதற்கு குடியேற்றத் திட்டங்கள் ஆதரவளிக்கும்.

புதிதாக வரும் சிலர், குறிப்பாக அவுஸ்திரேலியாவின் அகதி மற்றும் மனிதாபிமான நிகழ்ச்சியின் ஊடாக வருபவர்களுக்கு சிறப்பான ஆதரவு மூலம் நன்மை கிடைக்கும். இதில் ஆங்கிலம் படித்தல் மற்றும் அவசியமான கல்வியை அல்லது வேலைவாய்ப்புத் திறமைகளைப் பெறுதல் அடங்கலாம். அரசாங்கமானது தொடர்ந்தும் மனிதாபிமான முறையில் உள்வருவோருக்கு உதவப் பொறுப்பேற்றுள்ளது, குறிப்பாக அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்த பிறகு முதல் ஐந்து வருடங்களுக்கு, இதனால் அவர்களால் சிறந்த வாழ்க்கையைக் கட்டமைத்து, தன்னிறைவான, முழுதாகப் பங்களிக்கின்ற சமுக உறுப்பினர்களாக மாற முடியும். அவுஸ்திரேலிய அரசாங்கம் தற்போது, மனிதாபிமான முறையில் உள்வருவோருக்கு முன்னேற்றகரமான ஆங்கில மொழி, கல்வி, வேலைவாய்ப்புப் பலன்களை வழங்குவதற்காக தமது குடியேற்றச் சேவைகளைப் புனரமைத்து வருகிறது.

## எங்கள் பல்வகைத்தன்மை மற்றும் பகிர்ந்த தேசிய விருப்பின் நன்மைகளை உபயோகித்தல்

ஆங்கிலம் எங்களுடைய தேசிய மொழியாகும், இனியும் அதுவே தேசிய மொழி, இது புலம்பெயர்பவரின் ஒருங்கிணைவுக்கு மிகமுக்கியமான உபகரணமாகும். அதே நேரத்தில், எங்களுடைய பலமொழித்திறனுள்ள பணியாளர்குழுவானது பெருமளவில் உலகமயமாக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தில் வணிக நோக்கெல்லைகளை விரிவாக்கி, அவுஸ்திரேலியாவின் தகுதியுள்ள விளிம்பை உயர்த்துகிறது.
எங்கள் கலாச்சாரப் பல்வகைத்தன்மை என்பது எங்களிடமுள்ள மிகச்சிறந்த சொத்துகளில் ஒன்று - இது புத்தாக்கம், படைப்பாற்றல் மற்றும் பலம் ஆகியவற்றைப் பற்றவைக்கிறது. எங்களுடைய பலதரப்பட்ட பணியாளர்களின் திறமைகள், அறிவு, மொழி ரீதியான ஆற்றல்கள், வலைப்பின்னல்கள், படைப்பாற்றல் முதலியவற்றின் மூலம் எங்களுடைய சமூகத்திற்கு வலிமையூட்டப்படுகிறது. எங்களுடைய உற்பத்தித்திறனும் போட்டியிடும் திறனும், சர்வதேசப் பொருளாதார ஈடுபாட்டுக்கான வாய்ப்புகளை அடையாளம் கண்டு, கைப்பற்றும் எங்கள் ஆற்றலின் ஊடாக அதிகரிக்கப்படுகின்றன.

இதில் பல தற்காலிகப் புலம்பெயர்வாளர்களின் திறமை உள்ளடங்கும், இவர்கள் இங்கே இருக்கின்ற போது, அவுஸ்திரேலியப் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் பங்களிக்கிறார்கள். பலர் அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாகக் குடியேறுகிறார்கள், ஏனையோர் அவர்களது தாய்நாட்டுக்குத் திரும்புகிறார்கள் அல்லது இன்னொரு

நாட்டுக்குச் செல்கிறார்கள், இவர்கள் வெளிநாடுகளில் மேலும் எங்களுடைய கலாச்சார, வணிக மற்றும் பொருளாதார வாய்ப்புகளுக்கு வலுவூட்டுகிறார்கள்.

அரசாங்கம், வியாபாரங்கள், கைத்தொழிற்துறை என அனைத்துமே எங்களுடைய பல்தரப்பட்ட பணியாளரின் நன்மைகளை முன்னேற்றுவதிலும் அதிகப்படுத்துவதிலும் பங்காற்றுகிறார்கள்.

## இணக்கமான, சமூகரீதியாக இசைவான சமூகங்களைத் தொடர்ந்து கட்டமைத்தல்

எங்களுடைய பகிர்ந்த பெறுமதிகளே எங்களுடைய பொருளாதாரச் செழிப்பினதும் எங்களுடைய சமூகரீதியாக இசைவான சமூகத்தினதும் மிகமுக்கிய அம்சமாகும்.

எங்களுடைய கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பகிர்வது என்பது அவுஸ்திரேலியராக இருப்பதன் பொருளைக் கொண்டாடுவதன் மற்றும் எங்களுடைய சமூகத்தில் சேர்க்கப்பட்டுள்ளதை உணர அனைவருக்கும் உதவுவதன் ஒரு பகுதியாகும். சமூக இணக்கமானது தேசிய ஐக்கியத்தை வளர்க்கும். பொதுவான அனுபவங்களால் பகிர்ந்த வரலாறுகளை உருவாக்கவும், பகிர்ந்த எதிர்காலத்தைச் சிறப்பாக அமைக்கவும் முடியும்.

மாறாக, இனவாதமும் பாரபட்சமும் எங்களுடைய சமூகத்தின் மதிப்பைக் குறைக்கின்றன. இனத்துவேசத்தைக் கிளறிவிடுபவர்களைக் கண்டிக்கிறோம்.

வழக்கமான மதநம்பிக்கைக்கு இடையிலான மற்றும் கலாசாரத்திற்கு இடையிலான உரையாடலானது சமுகங்களுக்கு இடையில் ஏற்படச் சாத்தியமான பதற்றங்களைக் குறைக்கவும், இசைவையும் இணக்கத்தையும் பலப்படுத்தமும் முக்கியமாகும். இத்தகைய உரையாடலானது, தவறான எண்ணத்தைக் குறைப்பதற்கும், கலாச்சாரங்களுக்கு இடையில் புரிந்துணர்வை வளர்ப்பதற்கும், வெவ்வேறு இன மற்றும் மதக் குழுக்களுக்கு இடையில் உறவுகளை முன்னேற்றுவதற்கும், உடைமை மற்றும் நம்பிக்கை உணர்வை அதிகரிப்பதற்கும் உதவுகிறது.

கலாச்சாரப் பின்னணி, பிறப்பிடம் அல்லது சமயம் எதுவாக இருந்தாலும், அவுஸ்திரேலியாவிலுள்ள அல்லது அவுஸ்திரேலியாவுக்கு வருகின்ற எவருக்கும் ஒருவருடன் ஒருவர் தொடர்புபடுவதற்கும் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கும், இனவாதம் அல்லது வன்முறையான தீவிரவாதத்தின் எந்தவொரு வடிவத்தையும் மறுப்பதற்கும் பொறுப்புள்ளது.

### முடிவு

தொடர்ந்துவந்த அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் ஒரு பல்கலாச்சார அவுஸ்திரேலியாவுக்காக உறுதியான பொறுப்பை நிர்மாணித்துள்ளன. இந்தப் புதிய

அறிக்கையுடன் அரசாங்கத்தின் பொறுப்பைப் புதுப்பிப்பதற்கும் மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும் இது பொருத்தமான காலமாகும்: எங்கள் சமுகத்தை நியாயப்படுத்தும், எங்கள் தேசிய விருப்பத்திற்கு ஆதரவளிக்கும் மற்றும் சவால்களுக்கு எப்படிப் பதிலளிக்கிறோம் என்று வழிகாட்டும் பெறுமதிகள் மற்றும் பொறுப்புகள் குறித்த தெளிவான செய்தி. இது, அவுஸ்திரேலியாவுக்கான எங்கள் கடப்பாட்டின் மூலம் ஐக்கியமான மற்றும் சுதந்திரத்திற்கும் செழுமைக்கும் பொறுப்பேற்ற ஒரு பலமான, வெற்றிகரமான பல்கலாச்சாரத் தேசமாக எங்களுடைய எதிர்காலத்திற்கான தொலைநோக்கை வழங்குகிறது.